**CC.No**. 142/2024

**Date**: 18.04.2026

**ம.சா. 1.  பழனியப்பன், த/பெ. சுப்பையா, காரைக்குடி**

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை**

**1) நான் தனலெட்சுமி சீனிவாசன் சிட்பண்டில் கோட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் விபரம் மற்றும் அறிவிப்புக்கான நான்தான் எனது வழக்கறிஞருக்கு தெரிவித்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கை நான் செல்லம் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேன். எனது புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள வங்கி கணக்கு எண் செல்லம் என்பவருடையது என்றால் சரிதான். ம.சா.ஆ.2 காசோலை செல்லம் என்பவருடையது என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலை எதிரியுடையது இல்லை என்றாலும், எனது புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள வங்கி கணக்கு எண்ணும் எதிரியுடையது இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பமும் எதிரியை நீதிமன்றத்தில் விசாரித்த ஆவணத்தில் உள்ள கையொப்பமும் வேறுபட்டு உள்ளது என்றால் சரிதான். வழக்கு காசோலை எதிரியுடையது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காசோலையை எங்கள் நிறுவனத்திற்கு எதிரியின் சார்பாக எதிரியின் மகன் பழனிக்குமார் என்பவர்தான் கொடுத்தார். எதிரியின் வழக்கு காசோலைக்கும் புகாரில் சொல்லியுள்ள வங்கி கணக்கு எண்ணிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை எதிரியுடையது இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.18 18:21:55 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)